னி பிரதி ரூ.5/-
ண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
. அர்ஜுனன்

நவம்பர்
2006
மரம் 6
கனி 12

**தெரிந்து கொள்வோம்**

## எருசலேம் - JERUSALEM

சமாதான ஸ்தலம் என்று இதனைகூறுவர். எருசலேம் பாலஸ்தீனா நாட்டின் மத்தியில் மலைகளால் சூழப்பட்டிருக்கும் நகரம், கிதரோன் பள்ளத்தாக்கும், இன்னோம் பள்ளத்தாக்கும் இதற்கு எல்லையாயுள்ளன. இப்பட்டணம் நாலுமலைக்குன்றுகள் மேல் நாலு பாகமாக கட்டப்பட்டிருக் கிறது. அவைகள் சீயோன், ஓபேல், அக்கிரா, பெசெத். தாவீது கி.மு 1046-ல் இதை எபூசியரிடம் இருந்து பிடித்து ஒரு விசேஷ பட்டணமாக்கினான். கி.மு 586-ம் ஆண்டில் நேபுகாத்நேச்சார் இதை பிடித்தபோது அழித்துப்போட்டான். மேலும் கி.மு537-ல் யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பினபோது இதைக் கட்டினார்கள். பிற்பாடு, நெகேமியா கி.மு444-ல் நன்றாகப் பழுது பார்த் ததுடன் அலங்கத்தையும் கட்டுவித்தான். மீண்டும் இயேசு கிறிஸ்துவினுடைய காலமாகிய புதிய ஏற்பாட்டு காலத்தில் யூதர்கள் கலகம் பண்ணியதால், ரோமர்கள் வந்து எருசலேமை முற்றிகை போட்டு, கி.பி70-ம்வருடத்தில் தீத்துராயன் காலத்தில் எருசலேம் தேவாலயம் தீயினால் சுட்டெரிக்கப்பட்டது. கி.பி637-ல் Saracenes)இதைப் பிடித்து தேவாலயம் இருந்த இடத்தில் ஒரு பள்ளிவாசலைக் கட்டினார்கள். மீண்டும் இந்த பட்டணம் சிலுவையுத்த வீரரால் (Crusaders)கி.பி 1099-ல் விடுதலையாக்கப்பட்டது.

எருசலேமின் நாமங்கள்: சாலேம் ஆதி.14:18, சங்.76:2, எபி.7:1,2. எபூசி யோசு.18:28, நியா.19:10,11. தாவீதின் நகரம் 2சாமு.5:9, 6:10, 1இராஜா.2:10, 3:1 பரிசுத்த நகரம் நெகே.11:1,18, ஏசா.52:1. தேவனின் நகரம் சங்.46:4, ஏசா.60:14. மகாராஜாவின் நகரம் சங்.48:2, மத்.5:35. பரிசுத்த பர்வதம் ஏசா.1:21,26, சகரி.8:3. புதிய எருசலேம் வெளி.21:2.


S.Rajaprasath




**கிறிஸ்துவின் சபையார் வழங்கும்**


**கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி**

உங்கள் WIN TV -யில் ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி காலை 6.15 முதல் 6.30 மணி வரை பாருங்கள். மற்றும்




செய்தியாளர்

**B. அர்ஜுனன்**




உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய சேவை SW 49 மீட்டரில், ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள்.

**THE WORD OF CHRIST**

P.O.BOX.5

BATLAGUNDU -624 202 S.INDIA

Phone: 04543 263278 Cell: 9443558041


"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15


Published by

WORLD LITERATURE PUBLICATIONS

Post Box No. 5, Batlagundu - 624 202.

SOUTH INDIA.


**"The Churches Of Christ salute you" Romans 16:16**

# திி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

**THE WORD OF CHRIST**

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

**மரம் - 6** **நவம்பர் - 2006** **கனி - 12**


ஆசிரியருரை

## தேவனை அறிந்துகொள்
## Know Thy God



இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் தன்னை உண்டாக்கின தேவனை முதலாவது அறிந்துகொள்ளவேண்டும். தேவனை அறிந்து கொள்ள மனிதன் பல வழிகளில் முயற்சி எடுக்கிறான். அவனுடைய முயற்சி தோல்வி அடைகிறது. தேவனைப்பற்றி அறிந்துகொள்ள நாம் பரிசுத்த வேதாகமத்திற்கு செல்லவேண்டும். தம்மைக்குறித்து பரிசுத்த வேதாகமத்திலே வெளிப்படுத்தியிருக்கிறார். தேவன் நம்முடைய சிருஷ்டிகர். God is our Creater. "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்" (ஆதி.1:27). வேதாகமத்தின் முதல் புத்தகத்திலே முதல் அதிகாரத்தில் மனிதன் உண்டாக்கப்பட்ட விதத்தைக் குறித்து படிக்கிறோம். மனிதன் தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளான். பூமியில் உள்ள மற்றவைகளைவிட இவன் விசேஷித்த படைப்பாக இருக்கிறான். மேலும் பூமியிலுள்ளவைகளையெல்லாம் ஆண்டுகொள்ளும்படியான அதிகாரத்தை தேவன் மனிதனுக்கு கொடுத்திருக்கிறார். அதிகாரத்தை தவறாக பயன்படுத்த அல்ல. தேவன் தம்மைப்போல நற்காரியங்களைச் செய்ய அவனுக்கு சகலத்தையும் ஆண்டுகொள்ளும்படியான அதிகாரத்தை கொடுத்திருக்கிறார். தேவன் மனிதனுக்கு இந்த அதிகாரத்தை கொடுத்தபோதிலும், தாமே அவனுக்கு ஆசானாக இருக்கிறார். அவன் எந்த விதத்திலும் தேவனை மிஞ்சி எண்ணிவிடமுடியாது. ஏனென்றால்

மனிதன் தேவனால் படைக்கப்பட்டவன். உண்டாக்கப்பட்டவன் உண்டாக்கினவருக்கு ஆலோசனை சொல்லமுடியாது. இன்றைக்கு அநேகர் இது இப்படியிருந்தால் நலமாக இருக்கும் அது அப்படியிருந்தால் நலமாக இருக்கும் என்று சொல்வதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். சொல்லத்தான் முடியும் அதை மாற்றியமைக்கவோ திருத்தியமைக்கவோ மனிதனுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை.

தேவன் நம்முடைய ஆசான். God is our Teacher. "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவே புசிக்கவேண்டாம்; அதை புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதி.2:16,17). முதலாம் அதிகாரத்தில் சிருஷ்டிப்பைக் குறித்துப் படித்தோம். இரண்டாம் அதிகாரத்தில் அந்த மனிதனுக்கு அவர் ஆசிரியராக இருக்கிறார். தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் நீ புசிக்கவே புசிக்கலாம் ஆனால் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை மட்டும் புசிக்கவே புசிக்கவேண்டாம் என்றார். சிருஷ்டிகருக்கு ஆதாம் இந்த விஷயத்தில் கீழ்ப்படியவில்லை. தேவனுக்கு எதிராளியாகிய பிசாசு, ஆதாமின் மனைவியாகிய ஏவாளை ஏமாற்றி அந்த விருட்சத்தின் கனியைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்று சொல்லி அவளை வஞ்சித்தது. இதற்கு கீழ்ப்படிந்த ஏவாள் தான் புசித்து பின்பு தன் புருஷனுக்கும் கொடுத்தாள். இதனால் இருவரும் தேவனுடைய கட்டளையை மீறினார்கள்.

தேவனுடைய கட்டளையை மீறுகிற விஷயத்திலே, ஜனங்கள் வருவது வரட்டும் என்று சொல்லி துணிந்து பாவத்தில் இறங்குகிறார்கள். வந்த பின்புதான் அல்லோலபடுவார்கள். வாகன ஓட்டிகளுக்கு சில விதிமுறைகள் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதைப் பின்பற்றினால் தான் விபத்தை தவிர்க்கமுடியும். வருவது வரட்டும் என்று வாகனத்தை ஓட்டுவாரேயானால் விபத்து துரிதமாக ஏற்படும். அதைப்போல தேவனுடைய கட்டளைகளை ஒரு மனிதன் மீறும்போது அவன் பாவத்தின் கீழ்தள்ளப்படுகிறான். அவனை பாவம் ஆண்டுகொள்ளும். இப்படியாக முதலாவது மனிதனாகிய ஆதாமை பாவம் ஆண்டுகொண்டது. மனிதன் பாவத்திற்கு கீழ்ப்படிந்தபடியால் அவனுக்கு தண்டனையை கொடுத்தார். தவறுசெய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பது பொதுவாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் ஒரு உண்மை. அப்படி தண்டிக்கப்படவில்லையென்றால் பாவம் பெருகி விடும். தவறுசெய்கிறவர்களும் துணிந்து செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். நாமும் கூட பிள்ளைகள் தவறு செய்துவிட்டால் தண்டிக்கிறோம். எதற்காக? அந்த தவறை மீண்டும் அந்த பிள்ளை செய்யக்கூடாது என்பதற்காக. அந்தவிதமாக தேவனும் தாம் உண்டாக்கின மனுஷனைத் தண்டித்தார். எப்படியென்றால் உலகம்

தண்டிக்கிற பிரகாரமாக தண்டிக்கவில்லை. மனிதன் பூமியில் இருக்கும் காலம் வரை அவனை நினைப்பூட்டுகின்ற அளவிற்கு அந்த தண்டனையானது அமைந்திருந்தது. இருவருக்குமாக சேர்த்து இந்த தண்டனையை கொடுத்தார். இதிலிருந்து நாம் ஒரு காரியத்தை அறிகிறோம். அவர் சிருஷ்டிகர் மட்டுமல்ல, அவர் ஒரு ஆசான் மட்டுமல்ல, நம்மை நியாயந்தீர்க்கும் அதிகாரம் படைத்தவராகவும் இருக்கிறார்.

தேவன் தண்டனை கொடுத்த வகையில் அவர் முதலாவது சர்ப்பத்தை பார்த்து நீ இதைச்செய்தபடியால் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய் என்றார். ஆதாம் முதலாவது உண்டாக்கப்பட்டபோதிலும், கர்த்தர் தண்டிக்கிறவிஷயத்திலே "ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார். பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய், நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்" (ஆதி.3:16-19). அன்பானவர்களே, தேவன் மனிதனுக்கு கொடுத்த இந்த தண்டனையை அவன் மண்ணுக்கு திரும்புமளவும் அனுபவிக்கிறான். இது தேவனுடைய நியதியாக இருக்கிறது. இதிலே ஏதாவது மாறுதல் செய்யமுடிகிறதா? மனிதனுடைய கண்டுபிடிப்புகள் பலவழிகளில் பெருகிக்கொண்டே சென்றாலும், இந்த விஷயத்திலே அவனால் ஒன்றும் பண்ணமுடியவில்லை.

ஆனால், தேவனை அறிகிற அறிவுக்கு நாம் திரும்புவோமானால், மனந்திரும்பும்படியாக எங்குமுள்ள மனிதருக்கும் கட்டளைகொடுத்திருப்பதை நாம் அறியமுடியும். அப்போஸ்தலனாகிய பவுல் அத்தேனே பட்டணத்தில் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்கும்போது "அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்" (அப்.17:30,31). அந்த மனிதன் யார்? அவர் தான் இயேசு கிறிஸ்து.

அவரை மூன்றாம் நாளிலே உயிரோடு எழுப்பினார். அவர் மனிதருடைய பாவத்தை தீர்க்கும் பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுக்கப்பட்டார். அவர் சிந்திய இரத்தத்தினாலே மனிதருக்கு பாவ மன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறது. இதை நீங்கள் விசுவாசிப்பீர்கள் என்றால் உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி இயேசுவை அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டும். அப்பொழுதே இரட்சிக்கப்படுவீர்கள். இல்லையானால் உங்கள் விசுவாசம், நம்பிக்கை எல்லாம் வீணாகபோய்விடும். ஆபிரகாம் என்ற தேவனுடைய மனுஷன் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தபடியால் ஆசீர்வதிக்கப்பட்டான். அவனோடு சென்ற லோத்தோ சுயமாக தேர்வுசெய்து சுய இச்சைக்கு தன்னை ஒப்புக்கொடுத்தபடியால் அவனுடைய சந்ததி சோதோம் கொமோரா பட்டண அழிவுக்கு பின் எண்ணவாயிற்றென்று தெரியவில்லை. ஆனால் ஆபிரகாமின் சந்ததியையோ தேவன் ஆசீர்வதித்தார். இன்றைக்கு இயேசுவை விசுவாசத்தின் மூலமாக அறிக்கையிடுகிறவர்கள் அவனுடைய சந்ததியாக இருக்கிறார்கள். விசுவாசத்தின் பிள்ளைகள் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

ஆபிரகாமுடைய சந்ததிகளாகிய ஏசா, யாக்கோபு விஷயத்தில் வேதாகமம் இப்படியாகச் சொல்லுகிறது: "அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே; ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று சொல்லியிருக்கிறதே. அதெப்படியென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள்... அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது. ஆகையால் நாம் என்ன சொல்லுவோம்? தேவனிடத்திலே அநீதி உண்டென்று சொல்லலாமா? சொல்லக்கூடாதே. அவர் மோசேயை நோக்கி: எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன் என்கிறார்" (ரோம.9:7-15). ஆகையால் நாம் முதலாவது தேவனை அறிகிற அறிவுக்கு நேராக நம்மை திரும்ப வேண்டும்.

பவுல் சொல்லுவதைப்போல: "தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்" (2கொரி.10:5). நீங்கள் இந்த விதமாக சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறீர்களா? அப்படி சிறைப்படுத்தி தேவனைப் பற்றி அறிகிற அறிவிலே வளர்ச்சியடையுங்கள். கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு என்பார்கள். ஆம், நாம் கற்றுதேர்ந்துவிட்டோம் என்று எண்ணாது. அவரைப் பற்றி நாம் அறிந்தது கொஞ்சம், அறியவேண்டியது இன்னும் அநேகம் என்ற எண்ணத்தோடு

கற்றுக்கொள்ளுங்கள். “தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி. இச்சையினாலே உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது” (2பேது.1:2-4). ஆனபடியினாலே, நீங்கள் வேதாகமத்தை தேடி வாசிக்கும்போது நம்மை சிருஷ்டித்த தேவனை அறிகிற அறிவிலே வளர்ச்சியடையமுடியும். அத்தோடு அவர் நமக்கு கொடுக்கிறதான ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் அறிந்துகொண்டு கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கமுடியும். கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

*The fool says... There is no God.*

*The Bible says Know God!*

“உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்”
*சங்கீதம்37:5*



**செங்கல்பட்டு மாவட்டம் இருபத்துநான்காவது வாசகர் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்**

# நாம் ஏன் ஜெபத்தை நம்புகிறோம்

## Why We Believe In Prayer

*J.C.Choate*



ஜெபம் என்பது ஒரு வேதாகம காரியம். இதன் பொருள் பேசுவது, சம்பாஷிப்பது அல்லது தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணுவது என விவரிக்கப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல், "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலி.4:6) என்றான்.

தேவனிடத்திலுள்ள நம்முடைய உறவில், அவர் நம்முடைய பிதா, கிறிஸ்தவர்களாகிய நாம் அவருடைய பிள்ளைகள். தேவன் நம்மிடம் ஒன்றும் எதிர்பார்க்கிறதில்லை, அவர் நித்தியமானவர், வல்லமையுடையவர், அவர் ஒருவரிடமிருந்தே எல்லா ஆசீர்வாதங்களும் வருகிறது. யாக்கோபு, "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (யாக்.1:17) என்கிறான். பிள்ளைகளாகிய நாம் தேவனை உடையவர்களாயிருக்கிறோம். அவர் நம்முடைய பிதா, நம்முடைய தேவைகளுக்காகவும், சோதனைகளை மேற்கொள்ள அவருடைய உதவிக்காகவும், நாம் பாவஞ்செய்யும் போது பாவமன்னிப்பிற்காகவும் நாம் கட்டாயமாக அவரிடம் செல்லவேண்டும்.

இப்போது நாம் கர்த்தரிடத்தில் விண்ணப்பத்தை ஏறெடுப்பது பற்றியும் ஜெபத்தைப்பற்றியும் மேலும், அவர் நமக்குச் செவிகொடுத்து நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறாரென்ற அவருடைய உறுதியைப் பற்றியும் சில வேதவாக்கியங்களில் காண்போம். கிறிஸ்து தம்முடைய நாட்களில் சீஷர்களுக்கு, "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" (யோவா.14:13,14) என்றார். மீண்டும் அவர், "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" (யோவா.15:7) என்றார். பிறகு அவர், "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை; நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக்

கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்" (யோவா.15:16) என்றார்.

மலையில் பிரசங்கித்துக்கொண்டிருக்கையில், இயேசு, "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" (மத்.7:7,8) என்றார்.

அப்போஸ்தலனாகிய யோவான் இந்த வார்த்தைகளை எழுதினார்: "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" (1யோவா.5:14,15).

தொடர்ச்சியான இந்த வேதவாக்கியங்களிலிருந்து, கர்த்தர் நம்முடைய ஒவ்வொரு ஜெபத்திற்கும், வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கும், எந்தவித முன்நிபந்தனைகளில்லாமல் பதிலளிப்பார் என முடிவுக்குவரலாம். ஆனால் வேதவாக்கியங்களை உற்று நோக்கும் போது, ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு ஜெபமாயிருக்க ஜெபத்தில் பல காரியங்கள் சம்பந்தப்பட்டுள்ளது என்பதையும், கர்த்தர் அதைக் கேட்டு பதிலளிப்பார் என்பதையும் நாம் காணமுடியும்.

முதலாவது, தன்னுடைய ஜெபங்கள் கேட்கப்படும்படிக்கு ஒருவன் கிறிஸ்தவனாக அல்லது தேவனுடைய பிள்ளையாக இருக்க வேண்டுமென வேதவாக்கியங்கள் கற்பிக்கிறது. பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிற தில்லையென்று யோவான்9:31-ல் வாசிக்கிறோம். ஏன் தேவன் பாவிகளுக்குச் செவிகொடுக்கிறதில்லை? பாவத்தினால் - பாவம் தேவனுக்கும் தேவனை நோக்கி ஜெபிக்க முயலுகின்ற ஒரு தனிப்பட்ட நபருக்குமிடையே வருகிறது. நீண்டகாலத்திற்கு முன் தீர்க்கதரிசி, "இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது என்றான் (ஏசா.59:1,2). மீண்டும் ஒரு பாவி, தேவனுடைய பிள்ளையாக இராதபோதும் தேவன் அவனுடைய பிதாவாக இராதபோதும் அவன் எவ்வாறு தேவனை நெருங்கமுடியும்? ஒரு பாவி தேவனிடத்தில் ஜெபிக்கமுடிந்தால் மேலும் தேவன் அவனுக்குச் செவிசாய்த்து தன்னுடைய ஜெபத்திற்குப் பதிலளிக்க வேண்டுமென அவன் எதிர்பார்த்தால் பிறகு கிறிஸ்தவனல்லாதவனுக்கு மேலாக

கிறிஸ்தவன் என்ன பலனைப் பெற்றிருப்பான்? அது தேவனிடத்திற்கு ஜெபிக்கவரும்போதும் கர்த்தர் ஒருவனுடைய ஜெபத்தைக் கேட்டு பதிலளிப்பாரென நம்பிக்கை கொண்டிருக்கும் போதும் சிலர் என்ன நினைக்கிறார்கள் என்பதற்கு மாறாக, கிறிஸ்தவனாயில்லதவனுக்கும் கிறிஸ்தவனாயிருக்கின்றவனுக்கு மிடையே ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது.

இரண்டாவதாக, ஒருவனுடைய ஜெபம் கேட்கப்படவேண்டுமானால், தேவனுடைய பிள்ளை நீதியிலும் கர்த்தரிடத்தில் உள்ள விசுவாசத்திலும் நிலைத்திருக்க வேண்டுமென தேவனுடைய வார்த்தை போதிக்கிறது. பேதுரு தன் காலத்திய கிறிஸ்தவர்களுக்கு, "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது" (1பேது.3:12) என்று எழுதினார். கிறிஸ்தவன் பாவஞ்செய்து அல்லது தேவனை விட்டு விலகி இருப்பானென்றால், அவன் மனந்திரும்பி, தன்னுடைய குற்றங்களை அறிக்கையிட்டு, தான் மன்னிக்கப்படும்படிக்கு கர்த்தரிடத்தில் ஜெபிக்கவேண்டும். யாக்கோபு, "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள், நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக்.5:16) என்றார். பிறகு மாயவித்தைக்காரனாகிய சீமோன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, தேவனுடைய பிள்ளையாக மாறினான், அவன் பேதுருவும் யோவானும் சமாரிய கிறிஸ்தவர்கள் மேல் கைகளை வைத்ததைப் பார்த்தபோது, அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றிருக்கிறார் களென்று அறிந்து, அவன் தேவனுடைய வரத்தை பணத்தினாலே வாங்க முயற்சித்தான் என்று வேதப்பகுதி சொல்லுகிறது. இப்போது பின்வந்தது என்ன என்று கவனியுங்கள்: "பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப்போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன்: நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றான்" (அப்.8:20-24). சீமோன் மனந்திரும்பாமல் மன்னிப்பிற்காக வேண்டிக்கொள்ளாமலிருந்து, ஜெபத்தில் தேவனிடத்திற்குச்சென்று கேட்கப்பட்டிருப்பான் என ஒரு நிமிடம் நாம் கற்பனை செய்யமுடியுமா? நிச்சயமாக முடியாது.

மூன்றாவதாக, எல்லா சீஷர்களும் தங்களுடைய ஜெபங்கள் கேட்கப்பட்டவைகளாயிருக்கும்படி சில விண்ணப்பங்களை உருவாக்க அவர்கள் இதைச் செய்யவேண்டியவர்களாயிருந்தார்களென சுட்டிக்காண்பிக்கின்ற வசனங்களைக் கவனியுங்கள், இந்த வசனங்களில் வாக்குத்தத்தங்களுக்கு முன்போ அல்லது வாக்குத்தத்தங்களைப் பின்பற்றியோ, கர்த்தர் சில நிபந்தனைகளின் அடிப்படையில் வாக்குத்தத்தங்களை உருவாக்குகிறார். உதாரணமாக யோவான்14:14-ல் கிறிஸ்து, "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்றார். ஆனால் அதற்கடுத்த வசனம் யோவான்14:15-ல், கிறிஸ்து, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்றார். கர்த்தர் பிதாவே என்றழைத்து எதையாகிலும் விண்ணப்பிக்கும் தேவனுடைய பிள்ளையாயிருந்தாலும் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள அவரிடத்தில் போதுமான அளவு அன்புகூராத ஒருவனுக்காகிலும் கர்த்தர் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறாரென இப்போது உங்களால் கற்பனை செய்யமுடிகிறதா? யோவான்15:7-ல் அவர், "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்றார். இந்தக் கூற்றுகளில் மைய வார்த்தைகள் என்னவென்றால், "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்," என்பவைகளே. ஒருவன் கர்த்தரிலும் கர்த்தருடைய வார்த்தை அவனிலும் நிலைத்திருந்தால், அந்த மனிதன் எப்படிப்பட்டவனாயிருப்பான்? அவன் தேவனுடைய விசுவாசமுள்ள பிள்ளையாயிருப்பான், நிச்சயமாக. ஆனால் ஒருவேளை ஒருவன் கர்த்தரில் நிலைத்திராமலும் அவருடைய வார்த்தை அவனில் நிலைத்திராமலும் இருந்தால், கர்த்தர் அந்த மனிதனுடைய விண்ணப்பத்திற்கு பதிலளிப்பாரா?

யோவான்15:16-ல் கிறிஸ்து, "...நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக" என்றார். இந்த வசனத்தின் முதல்பகுதியில் அவர் அவர்களைத் தெரிந்துகொண்டு அவர்கள் கனிகொடுக்கும்படிக்குச் சொன்னார். இங்கே அவர் சீஷர்களோடு பேசிக்கொண்டிருக்கிறார், அவர்கள் கனிகொடுக்கத் தவறுகின்றார்களென்றால், கர்த்தர் அவர்களுடைய விண்ணப்பங்களுக்குப் பதிலளிக்கின்றாரென நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? மீண்டும், ஒருவன் அவன் பெற்றுக்கொள்வான் என கிறிஸ்து வாக்குப்பண்ணினார் (மத்.7:7,8) எனக்கேட்டால், கிறிஸ்து தொடர்ந்து இவ்வாறு கூறுகின்றார், "உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு

நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத்.7:9-11). இந்தப் பகுதியின்படி பிதா - குமாரன் உறவிலும், அவரில் விசுவாசமிக்க பிள்ளைகளாகவுமிருக்கிற சீஷர்களோடு கிறிஸ்து பகிர்ந்தளிக்கின்றார் என்பது நிச்சயம். நீங்கள் இந்த வேதப்பகுதியைப் படிக்கையில், கர்த்ருடைய ஆசீர்வாதங்கள் அவருக்குக் கீழ்ப்படிகிறவனுக்கும் அவரிடத்தில் விசுவாசத்தில் நிலைத்திருக்கிறவனுக்கும் உண்டு என நீங்கள் எப்போதும் அறிந்துகொள்வீர்கள். கீழ்ப்படியாதவர்களையும், முரட்டாட்டம் பண்ணுகிறவர்களையும் அவர் எவ்வாறு ஆசீர்வதிக்கமுடியும்?

மேலும் கடைசியாக 1யோவான்5:14,15-ல் பிதாவனவர் அவருடைய சித்தத்தின்படி நாம் கேட்டால் அவர் அதைக் கேட்டு நம்முடைய ஜெபங்களுக்கு செவிகொடுப்பாரென யோவான் மிகத்தெளிவாக வெளிப்படுத்துகிறான். தன் பிள்ளைகளை நேசிக்கிற ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்குத் தீமையளிக்கும் அல்லது தன் புத்திரனை கெடுக்கும் பொருட்களை அவர்களுக்குக் கொடுக்கமாட்டான். ஆனால் அனைத்து சாத்தியமான வழியிலும் ஏதுவிருக்குமானால், தகப்பன் தன் பிள்ளைகளின் விண்ணப்பத்திற்குச் செவிகொடுப்பான். இதுவே நம்முடைய பிதாவினிடத்திலும் உள்ளது. நாம் நம்முடைய விருப்பத்தில் ஏதோ சிலவற்றை நினைக்கலாம், ஆனால் சகல ஞானமுடைய நம்முடைய பிதா வேறொரு விதமாக நினைக்கலாம். ஆனால் ஒரு அன்பின் பிதா நமக்கு எது நன்மையானதோ அதன்படி நமக்கு செய்வார் என நாம் உறுதியுடனிருக்கவேண்டும். அத்தோடு தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்ற பவுலின்கூற்றினை நாம் நினைக்கவேண்டும் (ரோமர்8:28).

கிறிஸ்தவர்களாகிய நாம் எப்போதும் அவரை நோக்கியிருக்கத்தக்க ஒரு பிதாவைப் பெற்றிருக்கும் பாக்கியமுடையவர்களாயிருக்கிறோம். கிறிஸ்துவானவர் மனுஷர் எப்போதும் ஜெபிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள் என்றார் (லூக்.1:8) பவுல் இடைவிடாது ஜெபிக்க வேண்டுமென்றார் (1தெச.5:17). ஆதிக்கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அப்பம் பிட்குதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என நாம் அறிவுறுத்தப்படுகிறோம் (அப்.2:42). மீண்டும், யாக்கோபு, யாராவது துன்பப்பட்டால் அவர்கள் ஜெபம்பண்ணக்கடவர்கள் என்கிறார் (யாக்.5:13). பிறகு அவர் நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது என்றார் (யாக்.5:16). இருந்தாலும் கர்த்தர் வியாதியஸ்தருக்கு ஒரு அற்புதம் நடக்க வேண்டுமென்ற நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளிப்பதாகவும் ஜெபங்கள் ஒரு வித்தியாசத்தை உருவாக்குமெனவும் வாக்குப்பண்ணவில்லை. தேவன் இயற்கை விதிகளின்படியும், மருந்துகள் மூலமும், டாக்டர்கள் மற்றும் நர்சுகள் மூலமாகவும் வியாதிசுகமடைய கிரியை நடப்பிப்பார் என நாம் ஜெபிக்கலாம். நாம் அடிக்கடி தேவன் காரியங்களை

மாற்றியமைக்க தாம் கிரியை செய்வதின் மூலம் அவர் தம்முடைய விற்பனையில் இருக்கின்றாரென அவர் வழியையும் பிரசன்னத்தையும் குறைத்து மதிப்பிடுகிறோம். நாம் சிலநேரங்களில் ஒரே ஒரு வழி அவருடைய வல்லமையைக் காண்பிப்பதும் அல்லது ஒரே ஒரு வழி அற்புதங்களின் மூலம் அவர் சிலவற்றைச் செய்வதுமென நினைக்கிறோம். இது விஷயமல்ல, நம்முடைய விசுவாசமெங்கே? தவிர, இயேசு நோயாளிக்கு வைத்தியன் தேவையெனச் சொன்னார். நாம் நம்முடைய தேவனாகிய கர்த்தரை சோதிக்கக்கூடாது (மத்.9:12;மத்.4:7).

நிச்சயமாக நம்முடைய ஜெபங்கள் நம்முடைய பிதாவினால் கேட்கப்படவேண்டுமானால், நமக்காகப் பரிந்து பேசுகிறவரும், மத்தியஸ்தரும், நம்முடைய பிரதான ஆசாரியருமாகிய கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கவேண்டும் (1யோவா.2:1; 1தீமோ.2:2:5; எபி.3:1).

ஜெபத்தில் விசுவசாம்கொண்டுள்ளீர்களா? பிதா தாமே உங்களுடைய ஜெபத்தைக் கேட்டு உங்கள் விண்ணப்பங்களுக்குப் பதிலளிப்பாரென்ற உறுதியுடன் ஜெபிக்க நீங்கள் தகுதியுள்ளவர்களாயிருக்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்தவர்களாயிரா விட்டால் நீங்கள் பிதாவினிடத்தில் ஜெபிக்கின்ற தகுதியில் இல்லை. கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்து, உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவினிடத்திலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதின்மூலம் உங்களைச் சரிசெய்துகொள்ளலாம் (எபி.11:6; யோவா.14:1; மத்.10:32; அப்.2:38). ஒருமுறை நீங்கள் இதைச் செய்கையில் கர்த்தர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக்கொள்வார் (அப்.2:47). பிறகு கர்த்தருடைய குடும்ப அங்கத்தினராக, கர்த்தருடைய பிள்ளையாக நிலைத்திருந்தால், கர்த்தர் உங்களுடைய ஜெபங்களுக்குச் செவிகொடுத்து அவைகளுக்குப் பதிலளிப்பாரென்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.


'ஒரேவழி' வேதபாடம்

The Master Course படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய்15-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று Certificate பெற்றுக்கொள்ளுங்கள்

வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College**
**Post Box 5, Batlagundu-624 202**
**S.INDIA**

# மனைவியைத் தேர்ந்தெடுக்கும் போது மதம் முக்கியமல்ல
# Religion Is Not Important When Choosing A Wife

பெண்கள் பகுதி

*-Betty Burton Choate*



இந்தியாவில் காலங்கள் மாறிக்கொண்டிருக்கின்றன, பழக்க வழக்கங்கள் வெகுவாக மாறிக் கொண்டிருக்கின்றன, விசேஷமாக நகரங்கல் மாறிக் கொண்டிருக் கின்றன. இளைஞர்கள் ஒரு கணவனை அல்லது மனைவியைத் தெரிந்தெடுப்பதில் தங்களுடைய சுய விருப்பத்தை நிறைவேற்றவே விரும்புகின்றனர். பலமுறை, தங்களுடைய பூரண வளர்ச்சியடையா பருவத்தில், அவர்கள் அழகை, அல்லது வசீகரத்தை அல்லது செல்வத்தை தாங்கள் உள்ளத் தில் நினைக்கின்றவற்றை வாழ்க்கைத் துணையில் எதிர்பார்க்கின்றனர். ஒழுங்குபடுத்தப்பட்ட திருமணங்களில் கூட, பொற்றோரால் கருதப்பட்ட மிக முக்கியமான குணாதிசயங்கள் பட்டியலின் தலைப்பில் எப்போதும் இடம் பெறுவதில்லை.

ஒரு இளைஞன் தன் வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுக்கும் போது எவ்விதமான குணாதிசயங்களை எதிர்பார்க்க வேண்டும், அல்லது பெற்றோர்கள் எவ்விதமான குணாதிசயங்களை தங்களுடைய மனதில் கொள்ள வேண்டும்? குறிப்பாக, கிறிஸ்தவர்கள் மத்தியிலும், கர்த்தருடைய சபை அங்கத்தினார்கள் மத்தியிலும் எது மிக முக்கியமானதாக இருக்கிறது?

ஒரு பூரண வளர்ச்சியடைந்த கிறிஸ்தவனுக்கு, அல்லது தேவனுடைய ஞானத்திற்கேற்ப யோசித்துக்கொண்டிருக்கின்ற கிறிஸ்தவ பெற்றோர்களுக்கு, உள்ளான வாழக்கைத்துணை ஒரு பக்தியுள்ள கிறிஸ்தவனாக இருக்கவேண்டு மென்ற எண்ணமே முதலும் எல்லாவற்றிற்கும் மேலானாதுமான எண்ணமாக இருக்கவேண்டும். நம்முடைய பிள்ளைகள் மிகவும் சிறியவர்களாயிருந்த போது, அன்பு கிறிஸ்தவ பெற்றோர்களால் ஏதோ ஓரிடத்தில் வளர்க்கப்பட்டுக் கொண்டிருந்து, ஒரு நாள் திருமணம் செய்து கொள்ளவிருக்கும் நம்முடைய பிள்ளைகளாகிய சிறு பிள்ளைக்காகவும், பையனுக்காகவும் நாம் அதிகம் ஜெபித்தோம் இது அவர்கள் கிறிஸ்தவர்களைத் திருமணம் செய்வார்கள் கிறிஸ்தவர்களைத்தான் செய்யவேண்டும் என்பது முன்னமே தீர்மானம் செய்யப்பட்ட ஒன்றாக இருந்தது.

சிலர் "ஏன்? ஒருவர் எந்த சபை அங்கத்தினர் அல்லது எந்த சமயத்தைப் பின்பற்றுகிறவர் என்பது பற்றியகாரியம் என்னவிதத்தில் மிக முக்கியமான ஒன்று? என வினா எழுப்புவர்"

இதன் பதிலாக, புருஷனை அல்லது மனைவியை தெரிந்து கொள்ளுவது சம்பந்தமான பின்வரும் இக்கேள்விகளைப் பற்றி ஆழ்ந்த யோசனை செய்யுங்கள்:

★ இந்த மனிதன் என்னுடைய குடும்பத்தின் ஆவிக்குரிய தலைவராக இருப்பார். அவர் ஒரு பலமிக்க கிறிஸ்தவராக இல்லாவிட்டால், நான் நித்திய இரட்சிப்பை பெறும்படிக்கு என் வாழ்நாள் முழுவதும் விசுவாசமிக்க வாழ்வு வாழ அவர் எவ்வாறு எனக்கு உதவ முடியும்?

★ இந்த மனிதன் ஒரு கிறிஸ்தவர் அல்ல என நான் கருதுகின்றேன். அவர் எவ்வித பழக்கவழக்கங்களை கொண்டிருப்பார் அல்லது எவற்றில் முன்னேறுவார்? என்னுடைய குடும்பத்திற்கு சமாதானத்தைக் கொண்டுவருவாரா? அல்லது சண்டையை கொண்டுவருவாரா? அவர் மது அருந்துவாரா, பொய் சொல்லுவாரா, ஏமாற்றுவாரா, ஒழுக்கமில்லாமல் வாழ்வாரா, என்னை அல்லது என் பிள்ளைகளை தகாத முறையில் நடத்துவாரா? ஒரு கிறிஸ்தவனுக்கு தேவன் தன் வாழ்வின் மையமாயிருப்பாரானால் , அவரே அந்த முதலாவது இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கொள்ள வேண்டும் அதன் பிறகு என்னுடைய புருஷன் அவருக்கு எதிலும் இடம் கொடுக்கவில்லையென்றால், இது எப்பேர்பட்ட மனவேறுபாடுகளையும் வேதனையையும் உருவாக்கும்?

★ இந்த பெண் என்னுடைய பிள்ளைகளுக்கு தாயாகயிருப்பாள். என்னைக்காட்டிலும் அவள் நாள் முழுவதும் அதிகமான நேரம் அவர்களுடனிருப்பாள் அவளோ கிறிஸ்தவளாக இல்லாதபோது அவள் ஆவிக்குரிய காரியங்களை பிள்ளைகளுக்கு எவ்வாறு கற்பிக்க முடியும்?

★ நான் என்னுடைய மனைவியின் மேல் கொண்டுள்ள அன்பில் வளர விரும்புகிறேன். அவள் ஒரு கிறிஸ்தவளாக இல்லாவிட்டால், மேலும் நான் அவளைக் கிறிஸ்துவுக்கு ஆயத்தப்படுத்த முடியவில்லை என்றால், நித்திய ஜீவனுக்கேதுவான நம்பிக்கையில்லாத அவளுடைய வாழ்வையும் மரணத்தையும் பார்ப்பது மிகவும் வேதனை நிறைந்த காரியமாக இருக்கும்.

★ பத்தில் எட்டு நபர் கிறிஸ்தவரல்லாதவரை திருமணம் செய்து கடைசியில் தேவனையும் சபையையும் விட்டு விலகிப் போகின்றனர் என புள்ளி விவரம் கூறுகிறது. உதாரணமாக நான் கடந்து செல்ல திட்டமிட்டிருக்கும் நிலப்பகுதி கண்ணிவெடி வைக்கப்பட்டிருக்கிறது, அப்பொழுது அதைக் கடக்க முயற்சிசெய்கிறவர்கள் வெடித்து சிதறியிருக்கிறார்கள் என்பதை நான் அறிந்தால், நான் அதற்கப்பாலேயே நின்றுவிட மிகுந்த ஞானமுள்ளவளாய் இருப்பேன். கிறிஸ்தவரல்லாத துணையை தெரிவுசெய்கிற அநேகர் சோர்வடைந்து தேவனை விட்டு விழுந்து போயிருக்கிறார்கள் என்பதை நான் அறியும் போது, அதே தவறை நான் தெரிவு செய்ய மாட்டேன்.

நாம் 2கொரிந்தியர்6:14-18-ல் இந்த எச்சரிப்பை வாசிக்கிறோம்: "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?

தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? 'நான் அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்' என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், 'அசுத்தமானதைத் தொடாதிருங்கள்' என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்"

நம்முடைய பரமபிதாவாகிய தேவனுடைய ஞானத்தில், ஒரு வாழ்க்கைத் துணையைப் பற்றிய காரியத்தில் தவறான தெரிந்து கொள்ளுதலிலிருந்து நம்மை விலக்கிக்காக்கும்படிக்கு இந்த வார்த்தைகளை அவர் எழுதியிருக்கிறார். இரண்டாவது ஒரு கிறிஸ்தவனாக மாறுவதற்குரிய தீர்மானத்திற்கு, ஒருவருடைய கணவன் அல்லது மனைவியினுடைய தெரிந்து கொள்ளுதல் மிக ஆபத்தானதாயிருக்கிறது. ஒருவர் இது பற்றி மிக ஊக்கமாக ஜெபிக்கமுடியாது ஒவ்வொருதீர்மானத்தையும் வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் திருமணநாளின் முதற்கொண்டே தொடர்ந்து பாதிக்கும். ஒரு கிறிஸ்தவள் ஒரு பக்தியுள்ள கிறிஸ்தவரை திருமணம் செய்தால், அவர்கள் தேவனுக்குள் இணைந்து வல்லமையாகப் பலப்பட்டு வளருவார்கள், மேலும் அவர்கள் தங்கள் பிள்ளைகளையும் விலையேறப்பெற்ற விசுவாசத்திற்குள் கொண்டுவருவார்கள். ஆனால் ஒரு நபர் கிறிஸ்தவத்தினுடைய தன் மதிப்பீட்டிலும், தனக்குள்ள தவறான தீர்மானத்திலும் மதம் முக்கியமான ஒன்று அல்ல என்ற எண்ணத்தில் கிறிஸ்தவரல்லாத ஒரு நபரை திருமணம் செய்தால், அவன் தன் வாழ்வினுள் மிகுதியான தீமைநிறைந்த காரியங்களையும், அநேகமாக அவன் தன்னுடைய ஆத்துமாவிற்கும் தன்னுடைய பிள்ளைகளின் ஆத்துமாக்களுக்கும், தனக்குப்பின் வரும் தன் சந்ததிகளுக்கும் நித்திய அழிவையும் கொண்டு வந்திருக்கிறான். தயவு செய்து, இந்த தீர்மானத்தை மறு பரிசீலனை செய்யுங்கள்!

மனுஷருடைய குமாரர்களை
தேவனுடைய குமாரர்களாக் மாற்றும்படி தேவனுடைய குமாரன்
மனுஷ குமாரன் ஆனார் - Selected

பாடம் - 10

# பிரசங்கியாரின் வாழ்க்கை
## The Preacher`s Life

J.C.Choate

சபையின் தலைமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள மூப்பர்கள் உதவிக்காரர்கள், பிரசங்கியார்கள் மற்றுமுள்ளவர்களைப் பற்றி நாம் தெளிவாகப்பார்த்தோம். அந்த சமயத்தில் பிரசங்கியாரைப்பற்றி அநேக காரியங்களையும் பார்த்தோம். இந்த பாடத்தை தொடரும் வேளையில் பிரசங்கியாருடைய வாழ்க்கையைப் பற்றியும் நாம் பேசலாம். பிரசங்கியாரும் ஒரு மனிதனே, அவனுக்கு பலவிதமான பிரச்சனைகளும் தேவைகளும் உண்டு. அவன் மற்றவர்களைப்போலவே தன்னுடைய மதிப்பைக் காத்துக்கொள்ள வேண்டும்.

பிரசங்கியாருக்கும் அவருடைய வாழ்க்கைக்கும் பல முகங்கள் உண்டு. நீங்கள் ஒரு பிரசங்கியாராக வேண்டுமென்றிருந்தால் நாங்கள் சொல்லப்போகிற காரியங்களை நீங்கள் மிகவும் கவனமாக சிந்திக்க வேண்டும். பிரசங்கிப்பது என்பதே மிகமுக்கிமானதாயிருக்கும் பட்சத்தில் அதனுடைய பலம் பிரசங்கியாரின் வாழ்க்கையை பொறுத்தேயிருக்கிறது. அவன் ஒரு மாயக்காரனாகவோ அல்லது கூலிக்கு வேலை செய்கிறனாகவோ இருக்கலாம். அவன் அப்படியிருக்கக் கூடாதென்று நிச்சயமாகவே ஜெபிக்கிறோம். ஆனால் அவன் அப்படியிருந்தால் அவன் பகிரங்கப்படுத்தப்பட்டு நிராகரிக்கப்படவேண்டும்.

முதலாவதாக பிரசங்கியாருடைய வாழ்க்கை அவனுக்கு ஒன்றோடொன்று உதவுவதாக இருக்க வேண்டும். வேறு விதமாக சொல்வதென்றால் அவன் பிரசங்கிக்கிறபடி நடக்க வேண்டும். இயேசுவைக்குறித்து லூக்கா, அப்போஸ்தலர் 1:2 - ல் " அவர் .....செய்யவும் பிரசங்கிக்கவும் தொடங்கினார்" என்று எழுதுகிறார். கவனியுங்கள் இயேசு முதலாவது ஜீவித்தார், செய்தார், பிறகு பிறருக்கு போதித்தார். இந்த விதமான பிரசங்கமே இன்றைக்கும் என்றைக்கும் தேவை. வேறு எந்த விதமான பிரசங்கமும் கேலிக் கூத்தாயிருக்கும். இந்தப் பாடத்தில் பிரசங்கியாருடைய சரீர வாழ்க்கைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அவன் வாழ்கின்ற விதம். நன்னடத்தை அவனுடைய சமூக வாழ்க்கை, அவனுடைய பழக்கங்கள், அவனுடைய பேச்சு மற்றும் அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கையைப் பற்றி கவனிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

பிரசங்கியாருடைய சரீர வாழ்க்கையைப் பற்றி முதலில் பார்ப்போம். கிறிஸ்தவனாவதற்கு முன்பு அவன் வேறுவிதமான வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம். ஆனால் இப்பொழுதோ பாவமன்னிப்புக்கு ஏதுவான மனம் திரும்புதலினால் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார் ஆகவே வளர்ந்து வரும் பிரசங்கியார் தூய்மையான அப்பழுக்கற்ற தேவ வாழ்க்கை வாழ வேண்டும்.

அவனுடைய நன்னடத்தை கேள்விகளுக்கு அப்பாற்பட்டிருக்க வேண்டும். ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவர்களைக் குறித்து பவுல் சொல்வது விசேஷமாக இந்த இடத்தில் பொருத்தமாக இருக்கும் (ரோமர் 12:1-2).

பிரசங்கியார்கள் விசேஷமாக இளம் பிரசங்கியார்கள் வாலிப ஸ்திரீகளோடு பழகும் விதத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வயதான பிரசங்கியார் கூட பெண்களிடத்தில் பழகும் போது தாங்கள் சோதனைக்குட்பட்டு தங்கள் ஆத்துமாவையும் நற்பெயரையும் கெடுத்துக் கொள்ளாதபடி ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது உன் இளமையை குறித்து ஒருவரும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு மற்றவர்களுக்கு முன்பாக நல்ல மாதிரியை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்கிறார் (1 தீமோ 4:12). மேலும் தொடர்ந்து சொல்லும் போது "அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு" (2தீமோ 2:22) என எழுதுகிறார். பவுல் மேலும் ஒரு இளம் பிரசங்கியாகிய தீத்துவுக்கு எழுதும் போது " ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி" என்கிறார் (தீத்து 2:11-12). பிசராங்கியார்கள் தங்கள் பேச்சை கவனிக்க வேண்டும் அல்லது காத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு போதும் பொய் சொல்லவோ, ஆபாசமாக பேசி சிரிக்க வைக்கவோ, சபிக்கவோ சத்தியம் செய்யவோ வேண்டாம். பவுல் சொல்கிற ஆலோசனையின்படி கண்டனம் பண்ணப்படாத வகையிலே ஒருவர் பேச வேண்டும் (தீத்து 2:8). ஒருவன் தன் நாவை புறம்பேசுவதற்கோ பழி வாங்குவதற்கோ பயன்படுத்தக் கூடாது. யாக்கோபு சொல்கிறபடி "ஆகையால் என் பிரியமான சகோதரரே கேட்பதற்கு தீவிரமாயும், பேசுவதற்குப் பொறுமையாயும் கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக் கடவர்கள்" (யாக் 1:19).

அவனுடைய பழக்கவழக்கங்களைப்பற்றிய காரியம் என்ன? இயற்கையாகவே அவன் புகைபிடிக்கக்கூடாது, குடிக்கக்கூடாது, புகையிலை சம்மந்தமான அல்லது வேறுபழக்கத்திற்கு உட்படக்கூடாது. எந்தவிதமான போதை மருந்து பழக்கங்களிலும் சிக்கிக்கொள்ளக் கூடாது. தவறான அல்லது கேள்விக்குரிய எந்த ஒரு பொழுதுபோக்கையும் விட்டு ஒதுங்கியிருக்கவும். அவன் தன்னுடைய கடன்களை சரியாக திருப்பிச் செலுத்தவும் வேண்டும். கிறிஸ்தவனிலிருந்து பிரசங்கியார் வித்தியாசமானவர் அல்ல. மாறாக அவர் அநேகருக்கு தெரிந்திருக்கிறபடியால் அவர் எந்த விதமான வாழ்க்கை வாழ்கிறார் என்றும் மற்றவர்களிடத்தில் எப்படி நடந்துகொள்கிறார் என்றும் அநேகர் கூர்ந்து கவனிப்பார்கள். சககிறிஸ்தவர்களும் உலகத்தின் மற்ற மக்களும் அவரை சாதாரண கிறிஸ்தவர்களைவிட அதிகம் கவனிப்பார்கள்.

பிரசங்கியாருடைய சமூகத் தொடர்புகளைப் பற்றியும் இதுவே உண்மை. அவருடைய நண்பர்கள் யார், அவர் எந்த விதமான மக்களோடு இருக்க ஆசைப்படுகிறார். அவருடைய வேலையினிமித்தமாக எல்லாவிதமான மக்களோடும் பழக வேண்டும். ஆனால் அவர் யாருக்கு நண்பராக இருக்கிறார் என்பது கேள்வி, கெட்ட நடத்தையோடு கூடிய கேள்விக்குரிய குணாதிசியங்கள் உடையவர்களாக அவர்கள் இருக்க கூடாது. அவருடைய சரீரத்தைவிட முக்கியமாக ஆவிக்குரிய வாழ்க்கை எப்படியிருக்கிறது. ஜெபஜீவியம் எப்படி, வேதத்தை வாசிக்கும்படி செலவிடும் நேரம் எவ்வளவு? அவருடைய அனுதின வாழ்க்கை ஆவிக்குரிய தன்மையை வெளிப்படுத்துகிறதா? பிரசங்கம் தயார் செய்வதில் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்கிறார்? நன்கு படிக்கும் பழக்கம் அவரிடத்தில் உள்ளதா? அவர் உண்மையாகவே தன்னுடைய வேலையில் ஆர்வமுள்ளவராக யிருக்கிறாரா? தன்னுடைய பிரசங்கத்தில் அன்பையும் உண்மையான கண்டிப்பையும் வெளிப்படுத்துகிறாரா? வேதம் போதிக்கிறபடி தன்னுடைய வருமானத்திலிருந்து கொடுக்கிறாரா? தனிப்பட்ட ஊழியம் செய்கிறாரா? போதிக்கவும் வியாதியஸ்தரை சந்திக்கவும் செல்கிறாரா? வீட்டிலிருந்து வெளியூருக்குச் செல்லும் போது தொழுகையில் கலந்து கொள்கிறாரா? அவரை சுற்றியுள்ள மக்கள் அவரை எப்படிபார்க்கிறார்கள்? அவருக்கு நற்பெயர் இருக்கிறதா?

ஒருவர் ஆவிக்குரியவராக இல்லாவிட்டால் அது வெளிப்பட்டு விடும். பவுல் சொல்கிறபடி: "நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது அவைகளைச் செய்துகொண்டுவந்தீர்கள்" (கொலோ. 3:7). கிறிஸ்து சொல்கிறார் நாம் அவரையும் அவருடைய ராஜ்யத்தையும் முதன்மையாக வைக்க வேண்டும் என்று (மத் 6:33) மேலும் அவர் சொன்னது ஒருவன் என்னை பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னை தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அனுதினமும் என்னைப் பின்பற்றக்கடவன் (லூக்கா 9:23). ஒரு பிரசங்கியானவன் கர்த்தருக்கென்று தன்னை அர்ப்பணித்தவன். இந்த உலகத்திலும் வரப்போகிற உலகத்திலும் இரட்சிக்கப்பட மனிதர்களுக்கு சுவிசேஷத்தைச் சொல்லி உதவியாயிருப்பவன். ஆகவே அவன் மிகப்பெரிய பொறுப்பை எடுத்துக் கொண்டிருக்கிறான். அவன் கர்த்தருக்கும் சக மனிதர்களுக்கும் கொடுத்த வாக்குறுதியைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கர்த்தருக்கென்று நேரத்தையும் தேவைப்பட்டால் தன்னுடைய ஜீவியத்தையும் தியாகம் செய்யும்படி தன்னை அர்ப்பணித்திருக்க வேண்டும். இதில் ஏதாகிலும் குறையுமானால் அது ஒன்றுமில்லாததாகிவிடும். யாரோ ஒருவர் "நீ வேறு ஏதாவது செய்யக்கூடுமானால் பிரசங்கியாதே, ஆனால் நீ கண்டிப்பாகப் பிரசங்கிக்க வேண்டுமென்றால் மட்டுமே பிரசங்கி" என்று சொன்னார்.

நமக்கு பிரசங்கியார்கள் ... நல்ல பிரசங்கியர்கள்... கர்த்தருக்கு என்று தன்னை ஒப்புக்கொடுத்து அவருக்கு உண்மையாயிருந்து ஊழியத்தை செய்யக்கூடிய பிரசங்கியார்கள் அநேகர் தேவை!

# பேசும் வேதாகமம் - 24

★ இந்தச் சிறியரில் ஒருவனையும் எவ்விதமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; என்று இயேசு சொல்கிறார்? - அற்பமாய் - மத்.18:10.

★ மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் எதைக் கொடுக்கவும் வந்தார்? - தம்முடைய ஜீவனை - மாற்.10:45.

★ தீர்க்கதரிசி ஒருவனும் எங்கே அங்கீகரிக்கப்படமாட்டான்? - தன் ஊரிலே - லூக்.4:24.

★ விருத்தசேதனம் மோசேயினால் உண்டாகாமல், யாரால் உண்டாயிற்று? - பிதாக்களால் - யோவா.7:22.

★ யாரைப் பார்த்து இவன் வேதப்பிரமாணத்துக்குவிகற்பமாய்த் தேவனைச் சேவிக்கும்படி மனுஷருக்குப் போதிக்கிறான் என்றார்கள்? - பவுலை - அப்.18:13.

★ நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்? - பவுல் - அப்.20:24.

★ வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் எப்படியிருக்கும்? - பரிசுத்தமாயிருக்கும் - ரோம.11:16.


★ கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் என்னசொல்லாதிருங்கள்? - தீர்ப்புச் சொல்லாதிருங்கள் - 1கொரி.4:5.

★ நான் இடித்துப்போட்டவைகளையே நான் மறுபடியும் கட்டினால், எதை மீறுகிறவனென்று காணப்படுவேன்? - பிரமாணத்தை - கலா.2:18.

★ நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் என்னவாயும் இருக்கிறோம்? - உரியவர்களாயும் - எபே.5:30.

*தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது எபிரெயர் 4:12.*

# நான் கண்டு கொண்டேன்
# I Found Him



தேவனை அறியாதிருந்த நான் உலகத்தை இரட்சிக்கும்படியாக வந்த இயேசுகிறிஸ்துவின் மூலம் அவரை கண்டுகொண்டேன். அந்த இயேசு கிறிஸ்துவைப் பற்றி விவிலியம் அதாவது பைபிள் இவ்விதமாகப் போதிக்கிறது. அவர் உலகத்தின் பாவத்தைப்போக்கும் பலியாகவும், பாவிகளை இரட்சிக்கும்படியாகவும் இவ்வுலகத்திற்குவந்தார். அவரையும் அவருடைய வசனத்தையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளும்போது மெய்யான சந்தோஷத்தையும், சமாதானத்தையும், நீடிய பொறுமையையும், தயவையும் பெற்று இறுதியிலே நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்வீர்கள்.

இயேசு சொல்கிறார்: "குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்" (யோவா.6:40). அன்பானவர்களே, இவ்வுலக வாழ்க்கை இத்தோடு முடிவடைவதில்லை நம்முடைய ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் செல்லும். ஆகையால் உங்களுடைய ஜீவிய நாட்களிலே தேவனால் அனுப்பப்பட்ட அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது அவர் உங்களை கடைசிநாளிலே எழுப்புவார். நீங்கள் அவரோடு நித்திய வாழ்வை பெறும்படியான பாக்கியத்தைப் பெறுவீர்கள்.

"நானே வழியும் சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவா.14:6). உங்களை உண்டாக்கின தேவனை சந்திக்க இயேசுவையல்லாது வேறோரு வழி இல்லை. இதை வாசிக்கும் அன்பு நண்பரே, "சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுகதைகளுக்கு விலகி, தேவபக்திக்கேதுவாக முயற்சிபண்ணு சரீரமுயற்சி அற்பபிரயோஜனமுள்ளது: தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குதத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது. இந்த வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமாயிருக்கிறது" (1தீமோத்தேயு 4:7-9) என வேதம் போதிக்கிறது.

"அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே

வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்" (1தீமோத்தேயு 3:16). இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இந்த இரகசியம் யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. இவ்விதமாக உலகத்திலே ஒப்புக்கொடுக்கப்பட்டவர் ஆண்டவர் இயேசுகிறிஸ்து ஒருவரே! அவரைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறோம். கர்த்தர் இயேசு உங்களை வழிநடத்துவாராக! ஆமென்.

## வேதஅறிவுப்போட்டி எண் 74—ல் வெற்றிபெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| Mrs.வனிதா சாமுவேல் | - மதுரை | S.ஆனந்தராஜ் | - ஈரோடு |
| Mrs.லலிதாபிரேமகுமாரி | - மதுரை | R.ஜான் | சங்கரன்கோவில் |
| G.P.ஏசையன் ராஜ் | - கோபி | C.ஜாய் கிறிஸ்டினா | - நாகமலை |
| J.நிர்மலாஜான் | - மதுரை | E.ஜோசப் தேவதாஸ் | - நாகமலை |
| S.சாம் பிச்சை | - மதுரை | D.தேவதாஸ் | - சித்தூர் (A.P) |
| R.ஆனந்தகுமார் | - க. பாளையம் | A.ஆனந்த் | - நாகமலை |
| K.சின்னப்பன் | -வெள்ளகோவில் | | |

## வேதஅறிவுப்போட்டி எண் 74—ன் விடைகள்

1. இன்பமாயிருக்கும் - பிர.5:12
2. செர்கியுபவுல் - அப்.13:12
3. மந்தையைப்போலாக்குகிறார் - சங்.107:41
4. தள்ளிவிடவில்லை - ரோம.11:2
5. யோசுவா - யோசு.23:14
6. ஆம் - 1கொரி.11:15
7. தரிக்கலாகாது, தரிக்கலாகாது - உபா.22:5
8. கிறிஸ்துவுக்குள் - 2கொரி.5:19
9. மோசே - எண்.12:12
10. உங்களை நடத்துகிறவர்கள் - எபி.13:17

## ஜெபியுங்கள்



- 24 வது வாசகர் கருத்தரங்கை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக நன்றிசொல்லி...
- Radio & TV நிகழ்ச்சியின் முதலாம் ஆண்டு நிறைவு ஸ்தோத்திரக்கூட்டம் நல்லமுறையில் நடைபெற்றமைக்காக நன்றிசொல்லி...
- 04.11.2006 அன்று நமது தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்து சகோ. இராஜாமணி அவர்களால் வழிநடத்தப்பட்டு சகோ. ஜான் S. நாதன் அவர்களால் ஞானஸ்நானம் பெற்ற சகோ. ஈசாக்குக்காக...

# எவ்வாறு ஞாயிறு ஆராதனையில் கலந்து கொள்வது
# HOW TO ATTEND SUNDAY WORSHIP

*-Salvador Cariaga*

இந்த விஷயத்தில் நீங்கள் ஏற்கனவே வல்லுநராக இருப்பீர்கள், ஆனால் இவ்விஷயத்தில் அதிகப்படியான சில குறிப்புகள் உங்களுக்குத் தேவை. தயவுசெய்து சரியான முறையில் ஆராதிக்க நமக்கு உதவுகின்ற பின்வரும் தகவல்களை கவனியுங்கள்.

★ **ஞாயிற்று கிழமையில் சீக்கிரமாய் படுக்கையைவிட்டு எழும்படி சனிக்கிழமை மாலை சீக்கிரமாக படுக்கைக்குச் செல்லுங்கள்.** நன்றாக ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள். ஆராதனைக்கு தூங்கி வழிந்து கொண்டு செல்லாதீர்கள்.

★ **சபைக் கூடுகைக்கு சீக்கிரமாக வாருங்கள்.** கடைசி நிமிடம் வரை காத்துக்கொண்டிராதீர்கள். உங்களுடைய வருகை ஒழுங்குபடுத்துவதற்கும், வழிகாட்டுவதற்கும், ஏற்பாடுகள் செய்வதற்கும் இன்னும் இதுபோன்ற பல காரியங்களுக்கும் தேவையாயிருக்கிறது. நீங்கள் வழியில் செல்லுகின்ற புதியவரை நிறுத்தி அழைத்துவருகிறவராக இருக்கலாம்.

★ **நீங்கள் உங்களுடைய வேதாகமம் பேனா பேப்பர் மற்றும் குறிப்பேடுகளையும் கொண்டுவாருங்கள்.** செய்திநேரத்தில் அல்லது வேதபாடநேரத்தில் குறிப்புகள் எடுத்து அவைகளை எதிர்கால நலனுக்காக நேர்த்தியாக வரிசைப்படுத்திக்கொள்ளுங்கள்.

★ **ஊழியத்தில் பங்குகொள்ளுங்கள்.** பாடுங்கள், ஜெபியுங்கள் ஏற்றவேளையில் வினா எழுப்புங்கள், மேலும் ஏகசிந்தையுடன் ஒத்துக்கொள்ளும்போது இருதயத்தின் ஆழத்திலிருந்து "ஆமென்" என்று சொல்லுங்கள்.

★ **விருந்தினர்களை சந்தியுங்கள்.** உங்களை அறிமுகப்படுத்தி அவர்கள் உங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும் மனநிலையை உருவாக்குங்கள். அவர்கள் வேதத்தை அறியாதவர்களாக இருந்தால் உங்களுடைய வேத அறிவினை அவர்களோடு பகிர்ந்துகொண்டு, வேதவசனங்களை அவர்கள் கண்டுகொள்ளும்படி செய்யுங்கள்.

★ **உற்சாகமூட்டி ஒருவரை ஒருவர் வாழ்த்துங்கள்.** குறிப்பாக பிரசங்கித்தவரை, பாடல் நடத்துனரை, ஜெபத்தினை நடத்தினவரை, உடன் கிறிஸ்தவரை, புதியவிருந்தினரை மேலும் மற்றவர்களையும் இவ்வாறு செய்யுங்கள்.

★ **ஆராதனைக்குப் பிறகு சகோதரர்களை, விசேஷமாக விருந்தினர்களை சந்திக்கக் கூடுதல் நேரத்தை செலவிடுங்கள்.** அவசர அவசர மாக வெளியேறிவிடாதீர்கள். மேலும் உங்களுக்குத் தெரிந்தவர்களிடம் மட்டும் பேசாதீர்கள். விருந்தினர்கள் அல்லது புதிதாக வருகை தந்தவர்கள் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும் மனநிலையை உருவாக்குங்கள்.

# "ஸ்தானத்தை விட்டு விடாதே"

*A. Viji*



இந்த நிலையில்லா உலகில் மனிதனின் வாழ்க்கை எப்படிப்பட்டதாக உள்ளது? பொதுவாக மனிதன் அழுதுகொண்டே பிறக்கிறான்; பிறரை குறைகூறிக் கொண்டே வாழ்கிறான்; ஏமாற்றத்துடன் மரணத்தை காண்கிறான். வேத வசனம் கூறுகிறது "தன் கூட்டைவிட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ, அப்படியே தன் ஸ்தானத்தை விட்டு அலைகிற மனுஷனும் இருக்கிறான்" (நீதி.27:8).

முதலாவது மனிதனுக்கு மூன்று விதமான கட்டுப்பாடுகள் தேவை.1. உடல் கட்டுப்பாடு 2. மனக் கட்டுப்பாடு 3. ஒழுக்கக் கட்டுப்பாடு. உங்கள் உடலைப் போன வழியில் விட்டுவிட்டால் அது உங்களை உதவாக்கரையாக்கிவிடும். இதற்கு என்ன செய்வது? "துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்" (ரோம.13:14).

எப்போதும் முதல் தரமாகவே சிந்தியுங்கள். இரண்டாந்தர எண்ணங்களால் உங்கள் மனதை நிரப்பவேண்டாம். நிகழ்காலத்தில் சிக்கி விடாதீர்கள். உங்களின் நிகழ்காலம் எவ்வளவு முக்கியமற்றதாக வேண்டுமானாலும் இருக்கட்டும். உங்கள் எதிர்கால ஆத்தும வாழ்வை பற்றி சிந்தியுங்கள்.

மனிதன் தன் நிலையை மறந்தால், தன்னையே இழந்த நிலையில் காணப்படுவான். ஏனென்றால் மனிதனின் மனதில் ஆவியானவர் தங்கியிருக்கிறார். வசனம் கூறுகிறது "ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார், தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" (1கொரி3:17). எனவே, நீங்கள் உங்கள் ஸ்தானத்தை விட்டு விடாமல் பரலோக வாழ்வில் ஆத்துமா என்றென்றும் வாழ உங்களை ஒப்புக்கொடுங்கள். கர்த்தர் உங்கள் அனைவரையும் காப்பாராக!

# சத்திய வார்த்தையில் சரித்திரம்

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.

**மூன்றாம் அலெக்சாண்டர் மாவீரன்** ( Defender of men)
தோற்றம்: 20.9.356 B.C - மறைவு: 30.2.323 B.C.
தந்தை: 2ஆம்பிலிப்பு . மக்கெதோனியாவின் மன்னன்.

- ★ எகிப்தை வென்ற உடனே அலெக்சாண்ரியா நகரை நிறுவினான்.
- ★ உலகிலேயே முதன் முதலில் நாணயத்தில் தன் உருவத்தை பதித்த பெருமையுடையவன்.
- ★ கை, கால் வலிப்பு நோய் (Epileptic) உள்ளவன்.
- ★ வலது கண் நீல நிறமும், இடது கண் கறுப்பு நிறமும் உள்ளவன்.
- ★ இடது கை பழக்கமுள்ளவன்.
- ★ தனது 20-வது வயதில் மாசிடோனியாவின் மன்னனாக முடி சூட்டப்பட்டான்.
- ★ 13 வருட ஆட்சிகாலத்தில், கிரீஸ் முதல் எகிப்துவரைக்கும் மற்றும் இந்தியாவின் வடமேற்கு பகுதிவரை 3 கண்டங்களை ஆட்சி செய்தான்.
- ★ முப்பெரும் கண்டங்களை வெல்ல, ஐம்பெரும் படையை மேற்கொண்ட மகா அலெக்சாண்டரால் 22 நாட்களே வாழக்கூடிய கொசுவை வெல்ல முடியாமல் 11 நாள் காய்சலுக்குப் (மலேரியா) பிறகு பாபிலோனில் 30.2.323-ல் மரணம் அடைந்தான் (அப்போது பெப்ரவரிக்கு 30 நாட்கள் இருந்தது).
- ★ சிறுவனாக இருந்தபோது ப்யுனி பேலஸ் என்ற முரட்டு அரேபிய குதிரையை அடக்கி சவாரிசெய்தவன்.
- ★ தனது ஆசானும், வழிகாட்டியுமான அரிஸ்டாட்டில் (Aristotle 427-347 B.C) அறிவுரையான, உலகை வென்றிட கிரேக்க கலாச்சாரத்தைப் பரப்பு என்ற கொள்கையை கடைபிடித்தவன். இறுதியாக தான் வென்ற இந்தியாவை மன்னன் புருஷோத்துமன் திரும்ப ஆண்டிட வழிவகுத்தவன்.
- ★ அவன் மரணத்திற்கு பிறகு மனைவிகளும், மகன்கன்களும், சகோதரர்களும் இருந்தும், அவர்களின் சொந்த மக்களால் கொலை செய்யப்படுவதற்கு முன்னமே அவன் 3 தளபதிகளுக்கு, தன் நாட்டை ஆள நியமித்தான்.

  1. TOLEMY எகிப்தையும்
  2. SELEUCUS கிழக்கு கிரீஸ் நகரையும்
  3. CASSENER மசிடோனியாவையும்

**தானியேல் 11:2,3** (கி.மு. 539 -ல் எழுதப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படி 300 ஆண்டுகளுக்குப் பிறகு கிரேக்கராஜ்யம் தனது பலத்தை சிறிது, சிறிதாக இழந்து கடைசியில் தன் வம்சத்தினர் யாருமே ஆட்சிசெலுத்தாமல் அழிந்தது). இவ்வாறாக சத்தியவார்த்தை நிறைவேறினது.

...தொடரும்.

சிறுவர் பகுதி

# அகியா

**வேத பகுதி: 1இராஜாக்கள் 14:1-18**



அகியா ஒரு தீர்க்கதரிசி. இவன் இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமின் நாட்களில் தீர்க்கதரிசனம் உரைத்தான். யெரொபெயாமின் குமாரனாகிய அபியா வியாதியில் இருக்கும்போது, அவன் தன் மனைவியைப் பார்த்த நீ ஒருவரும் அறியாதபடிக்கு வேஷம் மாறி நீ உன் கையில் பத்து அப்பங்களையும், பணியாரங்களையும் ஒரு கலசம் தேனையும் எடுத்துக் கொண்டு சிலோவுக்குப் போ அங்கே உள்ள அகியா பிள்ளைக்குச் சம்பவிக்கப்போகிறது இன்னதென்று அவன் உனக்கு அறிவிப்பான் என்றான். தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளுக்கு காரியத்தை மறைப்பாரா? அவள் வருமுன்னே அகியாவுக்கு கர்த்தர் அதைக் குறித்து வெளிப்படுத்தினார். நீ அவளுக்கு இன்ன இன்ன பிரகாரமாகச் சொல்லவேண்டும்; அவள் உட்பிரவேசிக்கிறபோது, தன்னை அந்நிய ஸ்திரீயாகக் காண்பிப்பாள் என்றார்.

தேவனுக்குக் கீழ்ப்படிந்த அகியா தீர்க்கதரிசி என்னசெய்தார் தெரியுமா? இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: ஜனத்தினின்று உன்னை நான் உயர்த்தி, உன்னை இஸ்ரவேல் என்னும் என் ஜனத்தின்மேல் அதிபதியாக வைத்தேன் நீரோ, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, என் பார்வைக்குச் செம்மையானதையே செய்ய, தன் முழு இருதயத்தோடும் என்னைப் பின்பற்றின என் தாசனாகிய தாவீதைப்போல நீ இராமல், உனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் பொல்லாப்புச் செய்தாய்; ஆகையால் நீ எழுந்து, உன் வீட்டுக்குப் போ, உன் கால்கள் பட்டணத்தின் முன் பிரவேசிக்கையில் பிள்ளையாண்டான் செத்துப்போவான் என்று சொல்லி அவளை அனுப்பிவிட்டான். அந்தப்படியாக அவள் பட்டணத்தில் பிரவேசிக்கையில் அவன் செத்துப்போனான். யெரொபெயாமோ நல்ல வார்த்தை கிடைக்கும் என்று தன் மனைவியை அனுப்பினான். தேவனோ அவனுடைய பாவத்தை உணர்த்தினார்.

அகியாவைப்போல உள்ளதை உள்ளபடியே சொல்ல கர்த்தருக்கு ஊழியக்காரர்கள் தேவை. அப்படிப்பட்டவர்களோடு கர்த்தருடைய வார்த்தை தங்கும். அகியா அவள் கொண்டுவந்த பத்து அப்பங்களின் மீதும், பனியாரத்தின் மீதும், ஒரு கலசம் தேனின் மீதும் தன் கவனத்தை வைக்கவில்லை. கர்த்தர் சொன்னதையே அவளுக்கு அறிவித்தான். உங்கள் சபை போதகர் எப்படிப்பட்டவர்? வேத வசனங்களை உள்ளபடியே எடுத்துச் சொல்லுகிறாரா! அப்படியில்லையென்றால் வேதவசனத்தின்படி சொல்லச்சொல்லுங்கள்.

**மனப்பாட வசனம்**

**"மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்: அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்" (நீதிமொழிகள் 18:21)**

## வேத அறிவுப் போட்டி எண்.75

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால்* fh®oš ***இம்மாதம் 25ம்தேதிக்குள்*** *எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.* ***பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. சங்காரம் வருகிறது; அப்பொழுது எதைத் தேடுவார்கள், ஆனாலும் எது கிடையாது?
2. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், எவருக்குத் தம்மை ஒப்புவித்தார்?
3. நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் எவர்களை மறந்துவிடுவேன் என்கிறார்?
4. பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி எதிலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைத்திருக்கிறார்?
5. நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே ஜனங்கள் எப்படியிருக்கிறார்கள்?
6. தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; அவனிடத்தில் எது இல்லை?
7. முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை எப்படியிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்?
8. நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினவர் யார்?
9. மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால், அவர்கள் குருடரைப்போல நடக்கும்படி நான் அவர்களை என்ன செய்வேன் என்கிறார்?
10. பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல் யாருக்கென்று பிழைத்திருக்கவேண்டும்?

## நடப்புச் செய்திகள்

* இந்தியாவில் தலையாய பிரச்சனையாக உள்ள லஞ்சத்தை ஒழிக்க இளைஞர்களுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும் என காந்திகிராம பல்கலைக்கழகதுணைவேந்தர் கருணாகரன் பேசியுள்ளார்.
* இந்தியாவில் கடந்த ஆண்டு காச நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 14லட்சத்து 5 ஆயிரத்து 277 என்று மத்திய அரசு ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.
* கடந்த 2006 ஆகஸ்ட் மாதம் 22 -ம் தேதியுடன் சென்னை நகரம் தன் 367 வதுஆண்டை கண்டது.
* உலகில் படிப்பறிவு இல்லாதோர் 96 கோடியாகும். அதில் இந்தியாவில் மட்டும் 36 கோடி என்பது நம் மனதை உருக்கும் செய்தியாகும்.
* இந்தியாவில் ஒரு நிமிடத்திற்கு 5 தற்கொலைகள் நடக்கின்றன.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202. and Printed by R. Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202. Editor : B. Arjunan.

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2006-2008 Licensed to Post without prepayment
License No. TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th November 2006

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.




**கிறிஸ்துவின் சபை**

17.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202 திண்டுக்கல் மாவட்டம்
போன் : 04543 - 263278 செல் : 9443558041
E-mail : thewordofchrist@sancharnet.in


“சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” (யோவான் 8:32)

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**




திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
ஆகிய கிழமைகளில் உங்கள் WIN TV-யில் ஒவ்வொரு வாரமும்
காலை 6-15 மணிமுதல் 6-30 மணிவரை பாருங்கள்

மற்றும்



உங்கள் வானொலியில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்
(கொழும்பு சர்வதேச வானொலி) MW 873 Khz-ல்
ஒவ்வொரு வியாழன் காலை 7-15 மணி முதல்
7-30 மணிவரை கேளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**THE WORD OF CHRIST**
P.O. Box. 5, Batlagundu - 624 202 S. India ✆ 04543 263278 Mobile : 94435 58041

**தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்**
**மாத இதழின் ஆண்டு சந்தா**
இந்தியா ரூ. 50/- வெளிநாடு ரூ. 500/- தனிப்பிரதி ரூ. 5/-

**Monthly Magazine**

To

From

Editor
THE WORD OF CHRIST
P.O. Box. No. 5
Batlagundu - 624 202
S. India